இந்து சமய அறநிலையத்துறை
தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்
பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு விளம்பர அறிவிப்பு

தொலைபேசி எண்.04362 223384

1432 ஆம் பசலி 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு மட்டும் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்துடன் இணைந்த பிர்கா 1 முதல் பிர்கா 6 வரை அமைந்துள்ள திருக்கோயில்களின் கீழ்கண்ட விவரப்படிக்குள்ள இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு மூலம் எதிர் வரும் 12.07.2022 சவெ்வாய்கிழமை அன்று முற்பகல் 11.30 மணிக்கு இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் **உதவி ஆணையர்** அவர்கள், தஞ்சாவூர் ஆய்வர், ஏலதாரர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மத்தியில் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் முதல் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு மூலம் ஏலம் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழே குறிப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டும்.

**// பொது நிபந்தனைகள் //**

1. ஏலதாரர்கள் / ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அனைவரும் உலகளாவிய கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையை பின்பற்றும் விதமாக முககவசம் அணிந்து வர வேண்டும். சமூக இடை வெளியை பின்பற்றி பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டும். கிருமி நாசினியை கொண்டு கைகளை சுத்தம் செய்து திருக்கோயில் வளாகத்திற்குள் உள்ளே வர வேண்டும்.

2. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளுபவர்கள் ரூ. 20,000/ – க்கு மேல் உள்ள ஏலத்திற்கு தங்களது ஒரிஜினல் Pan card ஐ காண்பித்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டியது. ஒரிஜினல் Pan card இல்லாதவர்கள் இந்த பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

3. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தங்களது ஒரிஜினல் Pan card ஐ காண்பித்து ஒப்பந்தப்புள்ளி படிவம் 1 க்கு ரூ. 200/ – ரொக்கம் செலுத்தி ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்று அந்தந்த இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகைக்கான வங்கி வரைவோலை நிபந்தனை எண். 6 ல் கண்ட பெயருக்கு பெற்று பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் தங்களது Pan card நகல் இணைத்து சீல் இட்டு இவ்வலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் போட்டு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டியது.

4.பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து விருப்பம் உள்ளவர்கள் தங்கள் புகைப்படம் மற்றும் இருப்பிட முகவரி ஆவணமாக சான்றிடப்பட்ட குடும்ப அட்டை நகல், மற்றும் வாக்காளர் அடையாள அட்டை நகல் , ஆதார் அடையாள அட்டை நகல், சமர்ப்பித்து ஏல வைப்புத் தொகை பின்கண்ட விவரப்படி ஏலம் துவங்குவதற்கு முன்னரே செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

5. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளபவர்கள் காவல் துறையிடம் குற்ற நடவடிக்கை ஏதும் இல்லை என்பதற்கான சான்று பெற்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டும்.

6. மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இணைய தளத்திலிருந்து பெற்ற ஒப்பந்தப்பபுள்ளிகளை அனுப்பும் போது அந்தந்த இனங்களுக்குண்டானஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகைகளுக்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவ விலை ரூ. 200/- க்கும் ASSISTENT COMMISSIONER / TREASURER &MANAGER , THANJAVUR PALACE DEVASTHANAM, THANJAVUR. என்ற பெயருக்கு வங்கி வரைவோலை (DD) எடுத்து ஒப்பந்தப்புள்ளியுடன் Pan card நகல் மற்றும் நடப்பு மாதத்தில் பெற்ற வங்கி கணக்கு ஸ்டேட் மென்ட் நகல் ஆகியவை இணைத்து மூடி முத்திரையிட்ட உறையில் அனுப்ப வேண்டும். விதிகளை பின்பற்றாத ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் காலதாமதமாக வரப் பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

7. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாளில் முதலில் பொது ஏலம் விடப்படும். உயர்ந்த கேள்வி முடிந்த உடன் பொது ஏலம் நிறுத்தப்பட்டு அதன் பிறகு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும். இவ்விரண்டில் எது உயர்வான தொகையோ அத்தொகை தேவஸ்தான மதிப்பிற்கு குறையாமல் இருப்பின் அத்தொகையே முடிவான தொகையாக பதிவு செய்யப்படும்.

8. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பை காரணம் கூறாமல் நிராகரிக்கவோ, இரத்து செய்யவோ, வேறு தேதிக்கு ஒத்தி வைக்கவோ, உதவி ஆணையருக்கு முழு உரிமை உண்டு.

9. தேவஸ்தானத்திற்கு எவ்வகையிலும் பாக்கி செலுத்த வேண்டியவர்கள், டிகிரி செய்யப்பட்டவர்கள், தேவஸ்தானத்திற்கு எதிராக செயல்பட்டவர்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்களது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

10. ஏலம் உறுதி செய்யப்படாதவர்களின் டேவணித் தொகையை வட்டி ஏதுமின்றி பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிந்த தினத்தன்றோ அல்லது மறு அலுவலக நாட்களிலோ பெற்றுக் கொள்ள வேண்டும்.

11. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டவர்கள் ஏலத்தொகை முழுவதையும் உடன் ஸ்தலத்திலேயே செலுத்தி விட வேண்டும். செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு தேவஸ்தானத்திற்கு ஆதாயமாக எடுத்துக்கொள்ளப்படும். எக்காரணத்திற்காகவும் திருப்பி தரப்பட மாட்டாது. மேலும் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு இரத்து செய்யப்பட்டு மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி திறப்புக்கு விடப்படும். மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி திறப்பில் தொகை குறைவு ஏற்பட்டால் முன் ஏலதாரர் / ஒப்பந்தப்புள்ளிதாரர் அதனை ஈடு செய்ய வேண்டும். கூடுதல் தொகைக்கு மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி சென்றால் மேற்படியாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதுடன் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்வதற்காக செலுத்தியுள்ள டேவணித் தொகையையும் பறிமுதல் செய்யப்படும்.

12. தேவஸ்தான மதிப்பிற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி போகவில்லை என்றால் ஏலத்தை நிறுத்த தேவஸ்தானத்திற்கு முழு உரிமை உண்டு. தேவஸ்தான நிர்வாகத்தால் உறுதி செய்யப்படும் அனைத்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டும், இரத்து அங்கீகாரத்திற்குட்பட்டும் உறுதி செய்யப்படும்.

13. மேற்படி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்களிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி ( TCS) திரட்டு செய்து அரசுக்கு செலுத்தப்படும்.

14. உரிமம் காலம் 30.06.2023 – உடன் முடிவுற்றதும் இதன் முழு உரிமையும் இத்திருக்கோயிலைச் சார்ந்து விடும். உரிம காலம் முடிந்த உடன் எவ்வித தொடர் உரிமையும் உரிமதாரர் கோரக் கூடாது.

15. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர் உரிமத்தினை வேறு நபருக்கு உள் குததகை விடக் கூடாது. ஏலம் உறுதி செய்யப்பட்டவர் ஏலத் தொகை முழுவதையும் நிபந்தனை எண். 11 ன் படி செலுத்தி ரூ.100/– க்கான முத்திரை தாளில் தனது சொந்த செலவில் ஒப்புதல் பத்திரம் தேவஸ்தான வாசகப்படி எழுதி கொடுத்த பிறகு தான் ஏல உரிமத்தை அனுபவிக்க அனுமதி வழங்கப்படும்.

16. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு ராஜீகம், தெய்வீகம் ஆகியவற்றினால் ஏற்படும் இழப்பிற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

17. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதியான நபர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகை மற்றும் ஏலத் தொகைகளுக்கு எவ்வித வட்டியும் கிடையாது. மேலும் திருக்கோயில் நிர்வாகம் அவ்வப்போது ஏற்படுத்தும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்டதாகக் கருதப்படும் மற்றும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்பவர்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியை தனக்காகத் தான் கேட்க / குறிப்பிட வேண்டுமே தவிர பிறருக்காக கேட்கக் கூடாது.

18. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு சமயத்தில் விதிமுறைகளை கூட்டவோ, குறைக்கவோ உதவி ஆணையருக்கு முழு உரிமை உண்டு .

19. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் நிபந்தனைகளை முழுவதும் தெரிந்த பின்னரே பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொண்டதாக கருதப்படும்.

20. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் பலவகை உரிமங்கள் குறித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொண்ட பின்னரே ஏலத்தில் கலந்து கொண்டதாக கருதப்படும்.

21. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு சமயத்தில் ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் உதவி ஆணையர் கூறும் விளக்கமே இறுதியானது. தவிர உரிமங்கள் தொடர்பாக ஏலம் எடுத்தவர்கள் பற்றி வரும் புகார்களை விசாரித்து தக்க உத்தரவு பிறப்பிக்க நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.

22. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் இந்து சமயத்தினர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

23. ஏலம் கேட்பவர்கள் ஏல பொருட்களை ஸ்தலத்திலேயே நேரில் பார்வையிட்ட பின்னரே ஏலத்தில் கலந்து கொண்டதாக கருதப்படும்.

24. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் வரை மட்டுமே செல்லுபடி ஆகும்.மறு ஒப்பந்தப்புள்ளி திறப்பிற்கு செல்லுபடியாகாது.

25. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புபவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்று பூர்த்தி செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு தினத்திற்கு முன்னதாகவே மேற்படி விளம்பரத்தில் கண்ட படி ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.

26. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புபவர்கள் அலுவலகத்தில் அதற்கான படிவம் பெற்று பூர்த்தி செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகையை வங்கி வரைவோலையாகவோ, வங்கி காசோலையாகவோ ( DD/ BANKERS CHEQUE ) செலுத்தலாம்.

27. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொண்டு உயர்ந்த கேள்வி கேட்டு உரிமம் பெற்றவர்கள் டேவணித் தொகை போக மீதம் உள்ள ஏலத் தொகைகளுக்கு ஸ்தலத்திலேயே வரைவோலையாகவும், பணமாகவும் வழங்கலாம். தவறும் பட்சத்தில் தங்களது உரிமம் இரத்து செய்யப்படும். எக்காரணம் கொண்டும் பின் தேதியில் பெற்றக் கொள்ளப்பட மாட்டாது. உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

28. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர் துறை அங்கீகார உத்தரவு ( Sanctioned Order) பெற்று வருவாய் துறைக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்திய பின்னரே உரிமத்தை நடத்த அனுமதிக்கப்படுவர். அனைத்து பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகளும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

29. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர் தனக்கு ஊர்ஜிதமானத் தொகை முழுவதையும் ஸ்தலத்தில் செலுத்தி ஏல தினத்தன்றே அச்சு இரசீது பெற்றக் கொள்ள வேண்டும். அச்சு இரசீது இருந்தால் மட்டுமே துறை அனுமதிக்கு உரிமம் வழங்க துறைக்கு விண்ணப்பிக்கப்படும். தவறின் மறு ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

30. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்கள் தம்மால் எடுக்கப்பட்ட ஏல இனத்திற்கு முழு தொகை செலுத்தியதற்கான தேவஸ்தான உதவி ஆணையர் அவர்களின் சான்று பெற்று அந்தந்த திருக்கோயில் பிர்கா கண்காணிப்பாளர், செயல் அலுவலர்/ கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர் வசம் காண்பித்த பின்னரே ஏல இனத்தை அனுபவிக்க அனுமதிக்கப்படும்.

31. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்பவர்கள் தங்களின் நிரந்தர முகவரி நிரூபிக்கும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையினை வைத்திருந்தால் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

32. டெண்டர்/ ஏலம் உரிமைதாரர்கள் கொரோனா பரவலை தடுக்கும் பொருட்டு தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

33. இதர நிபந்தனைகள் ஏதும் இருப்பின் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது அறிவிக்கப்படும்.

## <u>ஒப்பந்தப்புள்ளி படிவ விற்பனை மற்றும் இதர விவரங்கள்</u>

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் விற்பனை நாள் மற்றும் நேரம் : 29.06.2022 முதல்
   (அலுவலக நாள் மற்றும் நேரங்களில் மட்டும் ) 11. 07.2022 வரை
2. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 11.07.2022 பிற்பகல் 05.00 மணி

3. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டிய இடம் : தஞ்சாவூர், மேலவீதி,
அருள்மிகு விஜயராமர் திருக்கோயிலில்
இயங்கும் தேவஸ்தான
மத்திய அலுவலகம், தஞ்சாவூர்.

4. வங்கி வரைவோலையாகவோ அல்லது வங்கி காசோலையாகவோ மட்டும் டேவணித் தொகைகள் பெறப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 12.07.2022 சவெ்வா ய்கிழம மைூ றபகல்
11.30 மணி

6. வங்கி வரைவோ (DD) , வங்கி காசோலை (BANKERS CHEQUE ) எடுக்கப்பட வேண்டிய பெயர் முகவரி.

ASSISTENT COMMISSIONER / TREASURER &MANAGER ,
THANJAVUR PALACE DEVASTHANAM, THANJAVUR

12.07.2022 சவெ்வா ய்கிழமை பகல் 11.30 மணிக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும் ஏல இனங்களின் விவரம்

| வ. எ.ண். | திருக்கோயில் பெயர் | பொது ஏல இனங்கள் ( முதல் அழைப்பு ) | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1 | அருள்மிகு கோடியம்மன் திருக்கோயில் | தேங்காய் பழம் விற்பனை செய்யும் உரிமம் | 1,00,000 |
| 2. | | சைக்கிள்; இரு சக்கர வாகனம்பாதுகாப்பு உரிமம் | 60,000 |
| 3. | அருள்மிகு கீழசிங்க பெருமாள் திருக்கோயில் | தேங்காய் பழம் விற்பனை செய்யும் உரிமம் | 75,000 |
| 4. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் | ஆடு சேகரிக்கும் உரிமம் | 40,000 |

(ஒம்). கோ. கவிதா
உதவி ஆணையர்/பொருளாளர் மற்றும் மேலாளர்

## தேங்காய் பழம் விற்பனை செய்யும் உரிமம்

1) ஏலதாரர்கள் / ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அனைவரும் உலகலாவிய கொரானா தொற்று தடுப்பு நடவடிக்கையை பின்பற்றும் விதமாக முககவசம் அணிந்து வரவேண்டும். சமூகஇடைவேளையை பின்பற்றி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்துக்கொள்ள வேண்டும். கிருமி நாசினியை கொண்டு கைகளை சுத்தம் செய்து திருக்கோயில் வளாகத்திற்க்குள் உள்ளே வர வேண்டும்.
2) தேங்காய் பழம் விற்பனை செய்யும் உரிமம் பெற்றவர்கள் திருக்கோயில் நிர்வாகம் தேர்வு செய்து கொடுக்கும் இடத்தில் வைத்து வியாபாரம் செய்யவேண்டும்.
3) மேற்படி லைசென்ஸ் ஏல விளம்பரத்தில் கண்ட தேதி வரை அனுமதிக்கப்படும்.
4) உரிமதாரர்கள் இவ்வுரிமம் நடத்துவதற்கு தனியாக கொட்டகையோ இதர அமைப்புகளோ ஏற்டுத்தி கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
5) தேங்காய் பழம் தட்டு 1– க்கு ரூ.30/–மட்டுமே வசூலிக்க வேண்டும். (தேங்காய் 1–க்கு ரூ.15/– , பூவன் பழம் 2– க்கு ரூ.5/–, புஸ்பம் 1 முழம் ரூ.5/–, பத்தி 2–க்கு ரூ.3/–, வெற்றிலை விடயம் ரூ.2/–.
6) தேங்காய் பழம் உரிமம் சம்பந்தமாக ஏதேனும் புகார்கள் ஏற்பட்டு அதனால் ஏற்படும் வழக்குகளுக்கு தேவஸ்தானம் பொறுப்பேற்காது.
7) இந்த உரிமதாரர்கள் தங்களுக்கு திருக்கோயில்களில் வழங்கப்பட்டுள்ள இடத்தை தவிர மற்ற இடங்களில் வியாபாரம் செய்தல் கூடாது.
8) ஏல விளம்பரத்தில் உள்ள அனைத்து விதிகளும் உரிம காலம் முடியும் வரை இந்த உரிமதாரர்கள் கடைபிடித்து நடப்பதுடன் திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகளுக்கும் எவ்விதத்திலும் இடையூறு இன்றி புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் உரிமதாரர் நடந்து கொள்ள வேண்டும்.
9) ஏல உரிமம் பெற்றவர்கள் தேங்காய் பழம் ஆகியவற்றால் திருக்கோயில்களில் ஏற்படும் குப்பைகள் மற்றும் அழுக்குகளை தாங்கள் சொந்த பொறுப்பிலும் செலவிலும் தூய்மை செய்து தர வேண்டும். தவறினால் சுத்தமின்மையை காரணம் காட்டி உரிமத்தை இரத்து செய்ய நிர்வாகத்திற்கு உரிமையுண்டு. இதில் தேவஸ்தானத்திலிருந்து தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது. பாலித்தீன் பை உபயோகிப்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.

## சைக்கிள்– இருசக்கரம், நான்கு சக்கர வாகனம் பாதுகாக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

| வ.எண் | இனங்கள் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | சைக்கிள் 1–க்கு | ரூ.1/– |
| 2 | ஸ்கூட்டர் 1–க்கு | ரூ.5/– |

1) ஏலதாரர்கள் / ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அனைவரும் உலகலாவிய கொரானா தொற்று தடுப்பு நடவடிக்கையை பின்பற்றும் விதமாக முககவசம் அணிந்து வரவேண்டும். சமூகஇடைவேளையை பின்பற்றி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்துக்கொள்ள வேண்டும். கிருமி நாசினியை கொண்டு கைகளை சுத்தம் செய்து திருக்கோயில் வளாகத்திற்க்குள் உள்ளே வர வேண்டும்.

2) தேவஸ்தானம் நிர்ணயித்துள்ள தொகையை விட அதிகமாக வசூலித்தால் உரிமம் இரத்து செய்யப்பட்டு மறு ஏலம் நடத்தப்படும். ஏலதாரர் அதிகப்படி வசூலித்து அதனால் வழக்கு ஏதும் எற்பட்டால் அவ்வழக்கு செலவுகளுக்கு உரிமதாரரே முழு பொறுப்பேற்க வேண்டும். அதனால் அபராதம் ஏதும் செலுத்த நேர்ந்தால் அதற்கு எந்த வகையிலும் தேவஸ்தானம் பொறுப்பேற்காது. ஏலதாரரே முழு பொறுப்பேற்க வேண்டும். சைக்கிள், இருசக்கர வாகனங்கள் பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் உரிமதாரரையே சார்ந்ததாகும். பாதுகாப்பில் ஏற்படும் இழப்பிற்கு சம்மந்தபட்டவருக்கு அதனை ஈடுசெய்து கொடுக்க வேண்டியது உரிமதாரரின் முழுப் பொறுப்பாகும். உரிமதாரர் தமக்குரிய உரிமத்தை தவிர வேறு எந்த வியாபாரமும் செய்ய கூடாது.

3) உரிமதாரர் தேவஸ்தானம் நிர்ணயித்துள்ள தொகைணை விட அதிகமாக கட்டணம் சேவார்த்திகளிடம் வசூலித்து அது தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டால் அவ்வழக்கு சம்பந்தமான இறுதி செலவுகள் வரை உரிமதாரரே தமது சொந்த பொறுப்பில் பார்த்து கொள்ள வேண்டும். இது தொடர்பாக திருக்கோயில் பொறுப்பேற்காது. மேற்கண்ட விலைப்பட்டியல் கொண்ட ப்ளக்ஸ் போர்டு ஒன்று ஏலதாரர் தம் சொந்த செலவில் திருக்கோயிலில் வைக்க வேண்டும்.

4) உரிமதாரர் சேவார்த்திகளின் வாகனங்களை திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பிற திருக்கோயில் விழாக்களுக்கும் இடையூறின்றி நிறுத்தி எவ்வித புகாருக்கும் இடமின்றி பாதுகாக்க வேண்டும்.

5) தேவஸ்தானத்தால் வாகனங்கள் நிறுத்த வழங்கப்பட்டுள்ள இடத்தை நன்கு பார்த்து தெரிந்து கொண்டு முழு விவரம் அறிந்த பின்னரே இந்த ஏலம் எடுத்ததாகக் கருதப்படும். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இடம் தவிர புதிதாக வேறு இடம் ஏதும் கோரக்கூடாது.

6) இது தவிர ஏல விளம்பர அறிவிப்பில் கண்ட அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

(ஒம்). கோ. கவிதா

உதவி ஆணையர்/பொருளாளர் மற்றும் மேலாளர்